## கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சியில் மன்ற சாதாரணக் கூட்டம் 29.03.2022 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

**நகர்மன்றத் தலைவர் கொண்டுவரும் தீர்மானம்:-**

கீழக்கரை நகராட்சியின் நகர்மன்றத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் , துணைத்தலைவர் மற்றும் தி.மு.க. மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கீழக்கரை நகர்மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் மனமார நன்றி தெரிவிப்பது.

**தீர்மானம் எண்.**: 4 பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள் : 2</u>**

**<u>நகர்மன்றத் தலைவர் கொண்டுவரும் தீர்மானம்:—</u>**

கீழக்கரை நகர்மன்ற தலைவராக பை. செஹனாஸ் ஆபிதா ஆகிய என்னையும், 21 வார்டுகளில் கீழ்காணும் விவரப்படி நகர்மன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுத்த கீழக்கரை நகர்வாழ் மக்களுக்கு மன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன் நகர்மக்களின் அடிப்படை தேவைகளை உடனடியாகவும், படிப்படியாகவும் முழுமையான அளவில் நிறைவேற்ற நகர்மன்றம் உறுதி ஏற்கிறது.

| வ.எண். | நகர்மன்ற உறுப்பினர்கள் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திரு.ச. முகம்மது பாதுஷா | 01 |
| 2. | திருமதி. வே. ஜெயலெட்சுமி | 02 |
| 3. | திரு.வி.எஸ். ஹமீது சுல்தான்<br>(நகர்மன்றத் துணைத் தலைவர்) | 03 |
| 4 | திருமதி. ம. சூரியகலா | 04 |
| 5 | திருமதி.சி. காயத்ரி | 05 |
| 6 | திருமதி. செ. பைரோஸ் பாத்திமா | 06 |
| 7 | திரு. செய்யது மீரான் அலி | 07 |
| 8 | திரு.எம்.எம்.கே. முகம்மது காசிம் மரைக்கார் | 08 |
| 9 | திரு.மு. நசீருதீன் | 09 |
| 10 | திருமதி. தெ. பவித்ரா | 10 |
| 11 | திருமதி. ஐ. உம்மு சல்மா பீவி | 12 |
| 12 | திருமதி.செ. தாஜின் அலிமா | 13 |
| 13 | திரு.கா. முகம்மது ஹாஜா சுஜபு | 14 |
| 14 | திருமதி. அ. டல்சி | 15 |
| 15 | திருமதி. ஜனுல் ஆரிபா | 16 |
| 16 | திரு.ஜ. செய்யது முகம்மது பயாஸ்தீன் | 17 |
| 17 | திருமதி. சி. ஜக்கினா பேகம் | 18 |
| 18 | திரு. ச. சஃப்ரஸ் நவாஸ் | 19 |
| 19 | திரு. அ. சேக் உசைன் | 20 |
| 20 | திரு. சு. சித்திக் | 21 |

**<u>தீர்மானம் எண்.5</u>** : பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள் : 3</u>**

**<u>நகர்மன்றத் தலைவர் கொண்டுவரும் தீர்மானம்:–</u>**

1) கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள தினசரி சேரும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு.
2) கீழக்கரை நகராட்சி 01 முதல் 21 வரையிலான வார்டுகளில் உள்ள கால்வாய்கள் உயர்த்திக் கட்டப்பட்டு மூடிகள் அமைத்து சீரமைப்பு செய்யும் பணிகள்.
3) கீழக்கரை நகராட்சிப் பகுதிகளில் சுற்றித் திரியும் தெரு நாய்களை உடனாடியாக அப்புறப்படுத்துவது.
4) கீழக்கரை நகர் பகுதிகளில் சாலை ஓரங்களில் திரியும் ஆடு மாடுகளை பிடித்து உரிமையாளர்களிடம் அபராதம் விதித்தல்.
5) கீழக்கரை நகருக்கு போக்குவரத்து காவல்நிலையம் அமைத்தல் .
6) தெருவிளக்குகள் அனைத்து பகுதிகளிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.
7) கீழக்கரை நகர் பொதுமக்கள் மின்வாரிய கட்டணம் செலுத்துவதற்கு 2 கி.மீ தொலைவிற்கு செல்ல வேண்டியிருப்பதால், கீழக்கரை நகருக்குள் மின்சார கட்டணம் செலுத்துவதற்கு மின்வாரிய அலுவலக இடம் தேர்வு செய்து கொடுத்தல்.
8) கீழக்கரை நகராட்சியில் வார்டு வரையறை தொடர்பான குளறுபடிகளை சரி செய்தல்.

**<u>தீர்மானம் எண்.6</u>** : பதிவு செய்யப்பட்டது

**பொருள் : 4**

**I) கீழக்கரை நகர்மன்ற 8-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எம்.கே. முகம்மது காசிம் மரைக்கார் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட தெற்கு தெரு பகுதிகுட்பட்ட கழிவுநீர் குழாய்களை மராமத்து செய்து கழிவுநீர் செல்ல வழிவகை செய்யும் பணி. |
| 2. | மக்கத்தம்மா தொழுகை பள்ளி முதல் தெற்குத் தெரு பள்ளிவாசல் வரை பேவர் பிளாக் சாலை அ மைக்கும் பணி |
| 3. | ஜாமியா நகர் பெண்கள் தொழுகைப்பள்ளியிலிருந்து சொக்கநாதர் கோவில் செல்லும் சாலை வரை உள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை தற்போதுள்ள கழிவுநீர் குழாயுடன் இணைக்க புதிய கழிவு நீர் குழாய் அமைக்கும் பணி. |

**II) கீழக்கரை நகர்மன்ற 2-வது வார்டு உறுப்பினர் திருமதி.வி. ஜெயலெட்சுமி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 2வது வார்டு பகுதிகளில் பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை கால்வாய்கள் சரிசெய்து வாறுகால் மூடிகள் அமைக்கும் பணி |

**III) கீழக்கரை நகர்மன்ற 9-வது வார்டு உறுப்பினர் திரு. நசீருதீன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 9வது வார்டு வடக்குத் தெரு மஜ்ஜித் மன்பா பள்ளி எதிரே உள்ள பகுதியில் (சந்துகளில்) 150 மீ சுற்றளவு பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. |
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 9வது வார்டு வடக்குத் தெரு தைக்கா பின்புறம் அமைந்துள்ள பகுதியில் 250 மீ 160 dia PVC பைப் 6 இன்ஞ் மற்றும் 25 manual box அமைக்கும் பணி. |
| 3. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 9வது வார்டு பகுதிகளில் பழுதடைந்துள்ள வாறுகால்கள் சரிசெய்து வாறுகால் மூடிகள் அமைக்கும் பணி. |

**IV) கீழக்கரை நகர்மன்ற 18-வது வார்டு உறுப்பினர் திருமதி.சி. ஜக்கினா பேகம் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 18வது வார்டு சேரான் தெரு டிரான்ஸ்பார்மர் அருகில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இலவச குடிநீர் டேங்க் அமைத்து 6 குழாய்கள் இணைப்புடன் மக்கள் பயன்பாட்டிற்கு அமைத்து கொடுத்தல். |
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 3வது வார்டு பழைய உரக்கிடங்குஅருகில் சிறுவர் பூங்கா அமைத்தல். |

**V) கீழக்கரை நகர்மன்ற 05-வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ். காயத்ரி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| **வ.எண்.** | **பணிகள் விபரம்** |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 முத்துச்சாமிபுரம், அண்ணாநகர் மற்றும் அன்புநகர் பகுதிகளில் குடிநீர் வசதி, புதிதாக வாறுகால் அமைத்தல் மற்றும் புதிதாக தெருமின் விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணி.கள். |

**VI) கீழக்கரை நகர்மன்ற 4-வது வார்டு உறுப்பினர் திருமதி.எம். சூரியகலா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| **வ.எண்.** | **பணிகள் விபரம்** |
|---|---|
| 1. | கீழக்கரை நகர் 5வார்டு பருத்திக்காரத் தெரு தீனியா பள்ளிக் கூடம் அருகில் அருகே 2 வேகத்தடை அமைக்கும் பணிகள் |
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4 பேவர்கல் சாலை அமைக்கும் பணிகள்,<br>1. இந்து பஜார் வாணியர் தெரு பூக்கடை சந்து<br>2. மறவர் தெரு அங்கன்வாடி அருகில் உள்ள சந்து<br>3. விஸ்வகர்மா ஆச்சாரி சங்கத்தின் எதிர் சந்து<br>4. மறவர்தெரு முத்து ஸ்டூடியோ வீட்டின் அருகே உள்ள சந்து<br>5. மறவர் தெரு 1.25 மின்கம்பம் அருகில் உள்ள சந்து |

**VII) கீழக்கரை நகர்மன்ற 7-வது வார்டு உறுப்பினர் திரு.கே.எஸ்.ஆர். செய்யது மீரான் அலி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| **வ.எண்.** | **பணிகள் விபரம்** |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 வடக்குத்தெரு மாரியம்மன் கோவில் அருகில் உள்ள வாறுகால் வழியாக வெளியேறும் கழிவுநீர் சி.எஸ்.ஐ பள்ளி அருகில் உள்ள பம்பிங் ஸ்டேசன் வரை செல்கிறது. இதனால் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் வாறுகால் பதிலாக பைப்லைன் மூலமாக கழிவுநீரை அகற்றும் பணி. |
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 வடக்குத்தெரு மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கிணற்றை தூர்வாரி கொடுக்கும் பணி |
| 3. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 வடக்குத்தெரு முகைதீனியா பள்ளி அருகில் உள்ள சந்து பகுதி மற்றும் கால்வாய் சந்து பகுதியிலும் கழிவுநீரை பைப்லைன் மூலமாக வெளியேற்றும் பணி. |
| 4. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 வடக்குத்தெரு சி.எஸ்.ஐ பள்ளி அருகில் உள்ள வாறுகால் மற்றும் மணல்மேடு பின்புறம் உள்ள வாறுகால்களில் |

| | |
|---|---|
| | வாறுகால் மூடி அமைக்கும் பணி |
| 5. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 வடக்குத்தெரு பகுதிகளில் 15 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்கும் பணி. |
| 6. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 7வது வார்டு பகுதிகளில் பழுதடைந்துள்ள வாறுகால்கள் சரிசெய்து வாறுகால் மூடிகள் அமைக்கும் பணி. |

**VIII) கீழக்கரை நகர்மன்ற 6-வது வார்டு உறுப்பினர் திருமதி. பெரோஸ் பாத்திமா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 முன்னாள் கவுன்சிலர் சாகுல் ஹமீது வீட்டிலுருந்து கஸ்டம்ஸ் ரோடு வரை புதிதாக கழிவு நீர் பைப்லைன் அமைக்கும் பணி. |
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பட்டாணியப்பா அற்ச்சிலிருந்து பெரிய வீடு வரைக்கு கழிவுநீர் பைப் லைன் அமைக்கும் பணி. |
| 3. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட முகம்மது காசீம் அப்பா தர்ஹா எதிரில் உள்ள பழைய உரக்கிடங்கில் புதிய பம்பிங் ஸ்டேசன் அமைக்கும் பணி. |
| 4. | கீழக்கரை நகராட்சி தூய்மை பணியாளர்கள் வருகை பதிவேட்டிற்கு பயோமெட்ரிக் கருவி அமைக்கும் பணி. |

IX) கீழக்கரை நகர் 13வார்டு அப்பகுதி பொதுமக்களால் மாதிஹிர் ரதூல் சாலை மின்கம்பம் எண்.15/38 மற்றும் கூடுதலாக இரண்டு மின்கம்பங்களில் புதிதாக தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள்

X) கீழக்கரை நகராட்சி 20 வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சேக் உசைன் அவர்களின் பரிந்துரையின்படி, மீனவர் குப்பம் பகுதி பொதுமக்கள் கோரிக்கையினை மற்றும் இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட மீனவர் குப்பம் பகுதிகளில் மயானக்கரை சுற்றுச்சுவர் அமைத்தல், சமுதாய கூடம் அமைத்தல் , குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குப் பராமரிப்பு பணிகள்.

XI) கீழக்கரை நகராட்சி வார்டு எண்.16 நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஜனுல் ஆரிபா அவர்களின் கோரிக்கையின்படி, கண்மணி பவஸர்டெக் முதல் ஓடக்கரை பள்ளி வாசல் பகுதிகளில் கால்வாய்கள் தூர்வாரி பைப் லைன் அமைக்கும் பணி மற்றும் என்.எம்.டி தெரு முதல் பழைய எக்சேஞ் வரை கால்வாய்கள் தூர்வாரி பைப் லைன் அமைக்கும் பணி.

**XII) கீழக்கரை நகர்மன்ற 14-வது வார்டு உறுப்பினர் திரு.எஸ்.கே.வி.முகம்மது ஹாஜா சுஜபு அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சொக்கநாதர் கோவில் பகுதியில் பீர் முகம்மது வீட்டிலிருந்து எஸ்.ஆர் பேக்கரி வீடு வரை சுமார் 200 மீட்டர் தொலைவில் புதிய வாறுகால் பைப் லைன் அமைத்து அப்பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி |

| | |
|---|---|
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 500 பிளாட் ஹீசைன் ஹாஜியார் பள்ளி அருகில் உள்ள மூன்று சந்துகளிலும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. |
| 3. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் சுமார் 1000க்கு மேற்பட்ட மின் விளக்குகள் இருக்கும் காரணத்தினால் அதை சரி செய்வதற்கு உரிய நபர்கள் இல்லாமல் மின் விளக்குகள் பராமரிப்பின்றி உள்ளது. அதை சரி செய்வதற்கு உரிய நபர்களை பணியமர்த்துமாறு கேட்டுக் கொள்கிறேன். |

XIII) கீழக்கரை நகராட்சி வார்டு எண்.12 நகர்மன்ற உறுப்பினர் திருமதி.உம்மு சல்மா பீவி அவர்களின் கோரிக்கையின்படி, கால்வாய் உயர்த்தி சீரமைக்கும் பணி. மற்றும் கருணை கறிக்கடை சந்து முதல் எம்.எம்.கே வீடு வரை உள்ள வாறுகால்களை உயர்த்தி சீரமைக்கு பணி.

XIV) கீழக்கரை நகராட்சி வார்டு எண்.01 நகர்மன்ற உறுப்பினர் திரு.முகம்மது பாதுஷா அவர்களின் கோரிக்கையின்படி, அல்அக்ஸா நகர், தாய் கார்டன் மற்றும் ஜாமியா நகர் வரை புதிய கழிவு நீர் வழிதடம் அமைக்கும் பணி. மற்றும் தெற்கு ஜமாத் அத் இடத்தில் புதிய கழிவு நீர் தொட்டி ஜாமியா நகர் பகுதியில் அமைக்கும் பணி

**<u>அலுவலக்குறிப்பு</u>**

மேற்காணும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**<u>தீர்மானம் எண்.</u>**: 7

1) **VIII -** வரிசை எண்.1, 2, 4 பதிவு செய்யப்பட்டது. வரிசை எண்.3 கோரிக்கை பரிசீலனைக்கு பின் முடிவு எடுக்கப்படும்.
2) XII **-** வரிசை எண்.2 .பரிசீலனைக்குப்பின் முடிவு செய்யப்படும். வரிசை எண்.1, 3 பதிவு செய்யப்பட்டது.
3) பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் 2021–22–ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத் தொடர் 24.08.2021–ல். அறிவிப்பு எண். 12ன்படி, நகராட்சிகளில் உள்ள தெருவிளக்குகளை LED போன்ற ஆற்றல்மிகு தெருவிளக்குகளாக மாற்றம் செய்வதற்கும், புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படுவதற்கும் அறிவித்ததை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 27000/2021/WB, நாள். 18.12.2021 மற்றும் 02.03.2021ன்படியும், இந்நகராட்சியில் தெருவிளக்குகளை LED போன்ற ஆற்றல் மிகு தெருவிளக்குகளாக மாற்றம் செய்வதற்கும், அமைக்கப்படுவதற்கும் மதிப்பீடு தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மின் சேமிப்பு நிறுவனம் ESCO பரிந்துரை செய்த குறிப்பிட்ட திறன் கொண்ட LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு கீழ்காணுமாறு பணி தேர்வு செய்யப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| SL. No. | Name of the Works | No of Work | Estimate Rs in Lakhs |
|---|---|---|---|
| 1 | Conversion of all kinds of Street light into energy efficient LED Light at keelakarai Municipality | 1 | 150.00 |

(கோப்பு எண். 92/2022/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அங்கீகரிக்கலாம். மேற்படி திட்டத்திற்கு தேவைப்படும் நிதியினை முழு மானியமாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
2. அவசர அவசியம் கருதியும், இந்நகர் பொதுமக்கள் நலன்கருதியும், நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று திட்ட அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை தொடரலாம்.
3. தேர்வு செய்யப்பட்ட பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் அவர்களுக்கு உரிய அனுமதி பெறும் பொருட்டு திட்ட மதிப்பீடு சமர்ப்பித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
4. விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு உரிய நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்</u>** : 8 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் : 6**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் (KNMT) வார்டு எண்.2 சர்வே எண்.444–1B இந்துக்கள் மயானத்தில் நவீன தகனமேடை (LPG) அமைக்கும் பணிக்கு 25.01.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக இந்நகராட்சி தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 25.02.2022 அன்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகளின் விலைக்கூறல் (Price Bid) 03.03.2022–ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி இந்நகராட்சிப் பொறியாளரால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.45ரூ கூடுதலில் குறைவான விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள M/s. நெப்ட்யூன் ஆட்டோமேசன், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தம் கோரியுள்ளதால் மதிப்பீட்டை விட குறைவாக உடன்படிக்கை செய்து தர (Negotiation) கேட்டு பெறுவதற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விலை குறைப்பு செய்ய கோரியதில், திட்டப் பணிக்கான மூலப் பொருட்கள் மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக மேற்கண்ட பணிக்குரிய மதிப்பீட்டை காட்டிலும் விலை குறைப்பு செய்ய இயலாது என ஒப்பந்ததாரரால் 07.03.2022–ந் தேதிய கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு ரூ. 150.00 இலட்சம்**

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட இந்துக்கள் மயானத்தில் நவீன தகனமேடை (LPG) அமைக்கும் பணி | M/s. Neptune Automation RSF 83/3, 84/1, A1 Vaikkal Road, Pallipalayam, Nasiyanur Post - 638107 Erode. | ரூ.1,41,27,294/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.45% கூடுதல் |
| | | M/s. Good Care Enviro System Pvt. Ltd No.16 Lakshmi nagar 12th Street, Moulivakkam, Chennai-600116. | ரூ.1,42,69,311/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 5.50% கூடுதல் |

[கோப்பு எண்.384/2021/இ1 ]

**அலுவலகக் குறிப்பு.**

1. ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட 4.45% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், திட்டப் பணிக்கான மூலப் பொருட்கள் மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக மேற்கண்ட பணிக்குரிய மதிப்பீட்டை காட்டிலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.45 சதவீதம் கூடுதலில் குறைவாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
2. திட்டப்பணிக்குரிய மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் :** 09 தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**பொருள் : 7**

இந்நகராட்சிக்கு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி 2020–21 ஆம் ஆண்டு (Un Tied Grant for the year 2020-21) ரூ.50.00 இலட்சத்திற்கு மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 05.01.2022–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 15.03.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **15வது நிதிக்குழு மானியம் (Un tied Grant -2020-21)** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 மற்றும் வார்டு எண்.20 வடக்குத் தெரு பகுதியில் பழுதடைந்துள்ள தார் சாலையில்புதிதாக தார்ச்சாலை அமைக்கும் பணி **(Paver Finisher)** (Unicode-133020R037) | 50.00 | திரு.என். எர்ஸத்கான், ஒப்பந்ததாரர், அருப்புக்கோட்டை | ரூ. 45,90,873/– மதிப்பீட்டு தொகையை விட 4.79% கூடுதல் |
| | | | திருமதி. காத்தூன் பீவி, ஒப்பந்ததாரர், அருப்புக்கோட்டை | ரூ. 47,88,752/– மதிப்பீட்டு தொகையை விட 9.30% கூடுதல் |

**(கோப்பு எண். 610–1 /2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட 4.79 % கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், திட்டப் பணிக்கான மூலப் பொருட்கள் மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக மேற்கண்ட பணிக்குரிய மதிப்பீட்டை காட்டிலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.79 சதவீதம் கூடுதலில் குறைவாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
2. திட்டப்பணிக்குரிய மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்** : 10 அங்கீகரிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

**பொருள் : 8**

இந்நகராட்சிக்கு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி 2020–21 ஆம் ஆண்டு (Un Tied Grant for the year 2020-21) ரூ.13.50 இலட்சத்திற்கு மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 05.01.2022–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 15.03.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 15வது நிதிக்குழு மான்யம் (Un tied Grant -2020-21) | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 வடக்குத் தெரு கொந்த கருணை அப்பா 1, 2 மற்றும் 3வது சந்து பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி (Unicode-133019L172) | 13.50 | திரு.சி. பழனி ஒப்பந்ததாரர், முனியசாமி கோவில் தெரு, கீழக்கரை. | ரூ. 13,29,815/– மதிப்பீட்டு தொகையை விட 0.22% குறைவு |
| | | | திரு.பி.எம். கஜேந்திரன், 21/33, தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை. | ரூ. 13,31,447/– மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவு |

**(கோப்பு எண். 610–1 /2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.22 சதவீதம் குறைவில் கூடுதலான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி. பழனி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்** : 11 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**பொருள் : 9**

இந்நகராட்சிக்கு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி 2020–21 ஆம் ஆண்டு (Un Tied Grant for the year 2020-21) ரூ.16.00 இலட்சத்திற்கு மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 05.01.2022–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 15.03.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 15வது நிதிக்குழு மான்யம் (Un tied Grant -2020-21) | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ஜாமியா நகர் (Unicode-133016S063),வார்டு எண்.17 புதுக்குடி மெயின் ரோடு Unicode-133017R029), வார்டு எண்.18 நடுத்தெரு 1வது குறுக்கு சந்து (Unicode-133018R032),வார்டு எண்.19 சங்குமால் தெரு 8வது சந்து (Unicode-133019L170), வார்டு எண்.20 தட்டார் தெரு 3வது குறுக்கு சந்து (Unicode-133020L183) மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு 2வது குறுக்கு சந்து ஆகிய பகுதிகளில் சிறு மின்விசை பம்ப் அமைக்கும் பணி. | 16.00 | திரு.பி.எம். கஜேந்திரன், 21/33, தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை. | ரூ. 15,47,978/– மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவு |
| | | | திரு.சி. பழனி ஒப்பந்ததாரர், முனியசாமி கோவில் தெரு, கீழக்கரை. | ரூ. 15,62,945/– மதிப்பீட்டு தொகையை விட 0.87% அதிகம் |

**(கோப்பு எண். 610–1 /2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி.எம். கஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்** : 12 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**பொருள் : 10**

இந்நகராட்சிக்கு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி 2020–21 ஆம் ஆண்டு (Un Tied Grant for the year 2020-21) ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 05.01.2022–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 15.03.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **15வது நிதிக்குழு மான்யம் (Un tied Grant -2020-21)** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட மாலாங்குண்டு குடிநீர் பம்பிங் ஸ்டேசன் பகுதியில் மற்றும் மாட்டுக் கொட்டகை கழிவுநீர் பம்பிங் ஸ்டேசனில் 25 KVA DG ஜெனரேட்டர் அமைக்கும் பணி. | 10.00 | ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஸன், 4 அரண்மனை ராமசாமி கொத்தனார் மேற்கு தெரு, இராமநாதபுரம். | ரூ. 9,77,564/– மதிப்பீட்டு தொகையை விட 0.37% குறைவு |
| | | | திரு.பி.எம். கஜேந்திரன், 21/33, தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை. | ரூ. 9,81,954/– மதிப்பீட்டு தொகையை விட 0.08% அதிகம் |

**(கோப்பு எண். 610–1 /2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.37% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s. ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்**: 13 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**பொருள் : 11**

கீழக்கரை நகராட்சி சொந்தமான பேருந்து நிலைய பின்புறம் உள்ள கட்டண கழிப்பறை உரிமம் குத்தகை அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகர்மன்ற நாள்.20.01.2022-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது- அதன்பேரில் 22.03.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரியதில் பேருந்து நிலைய பின்புறம் உள்ள கட்டண கழிப்பறை உரிமம் குத்தகைக்கு வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்வி மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளி**

| வ.எண் | பெயர்/முகவரி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | - |

**ஏலக்கேள்வி**

| வ.எண் | பெயர்/முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | **திரு.பி.வீமராஜ், த/பெ.பொன்னுசாமி 8/461, பசும்பொன் நகர்,இராமநாதபுரம்.** | **1,14,500/-** |
| 2. | திரு.கா.மனோகரன், த/பெ.காளிமுத்து, 7/39,சுப்பு தேவன்,வலசை,இராமநாதபுரம். | 1,12,000/- |
| 3. | திரு.என்.மணிகண்டன், த/பெ.நடராஜன்,21/17,தட்டாந்தோப்பு தெரு,கீழக்கரை. | 1,14,000/- |
| 4. | திரு.எம்.மகேஷ்குமார், த/பெ.முனியாண்டி, 21/33, தட்டாந்தோப்பு,கீழக்கரை. | 1,11,500/- |
| 5. | திரு.எம்.சரவணன், த/பெ.மாரிமுத்து, 7/313, அலவக்கரைவாடி,கீழக்கரை. | 1,13,000/- |

**(கோப்பு எண்.852/2021/அ2)**

**அலுவலக குறிப்பு**

22.03.2022-ந்தேதி நடைபெற்ற ஏலத்தில் கலந்துகொண்ட மேற்கண்ட ஐந்து நபர்களில் வரிசை எண்.01 -ல்உள்ள **திரு.பி.வீமராஜ்,** என்பவர் பேருந்து நிலைய பின்புறம் உள்ள கட்டண கழிப்பறை உரிமம் குத்தகைக்கு உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியாக தொகையாக ஒரு வருட குத்தகை ரூ.1,14,500/-க்கு கேட்டுள்ளார் எனவே, உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள **திரு.பி.வீமராஜ்,** என்பவருக்கு குத்தகை உரிமம் தொகை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்: 14** அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் : 12**

இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.04.2022 முதல் 30.09.2022 வரை ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செய்யவும், 05.01.2022–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 25.03.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | **வருவாய் நிதி–2022–2023** | | |
| 1. | கீழக்கரை நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு, குடிநீர் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டர்கள் / ஆயில் என்ஜின்கள் பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள் வதற்கு 01.04.2022 முதல் 30.09.2022 வரை ஆறு மாதங்களுக்கு ஒரு நபர் வழங்குதல். | 1.13 | M/s. எவர்கிரீன் என்விரான்மெண்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.1,11,888/– மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.18% குறைவு |
| | | | M/s. ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட் 2/3 தண்டல் கந்தசாமி ராஜா நகர், இராஜபாளையம். | ரூ.1,12,896/– மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.72% அதிகம் |

**(ந.க.எண்.361/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.18% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.**: 15 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

.

**<u>பொருள் : 13</u>**

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய மூன்று கழிவு நீர் ஏற்ற நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும், அப்பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டிகளை பராமரிக்கும் பணிகளை ஆறு நபர்களை கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.04.2022 முதல் 30.09.2022 வரை வரை ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செய்யவும், 05.01.2022–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 25.03.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | **<u>குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2022–2023</u>** | | |
| 1. | கீழக்கரை நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மூன்று கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குதல் மற்றும் கழிவு நீர் தொட்டிகளைப் பராமரித்தல் இரவு மற்றும் பகல் பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள்வதற்கு 01.04.2022 முதல் 30.09.2022 வரை ஆறு மாதங்களுக்கு 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கு இருவர் வீதம் ஆறு நபர்கள் வழங்குதல். | 8.25 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.8,22,528/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.15% குறைவு |
| | | | M/s. ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட் 2/3 தண்டல் கந்தசாமி ராஜா நகர், இராஜபாளையம். | ரூ.8,28,576/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.59% அதிகம் |

**<u>(ந.க.எண்.362/2021/இ1)</u>**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.15% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்</u>** : 16 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் : 14**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2022 முதல் 30.09.2022 வரை ஆறு மாதங்களுக்கு பணி மேற்கொள்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செய்வதற்கும், 05.01.2022–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 25.03.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2022–2023** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள்வதற்கு 01.04.2022 முதல் 30.09.2022 வரை ஆறு மாதங்களுக்கு இரண்டு நபர்கள் வழங்குதல். | 2.75 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.2,74,176/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.15% குறைவு |
| | | | M/s. ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட் 2/3 தண்டல் கந்தசாமி ராஜா நகர், இராஜபாளையம். | ரூ.2,76,192/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.59% அதிகம் |

**(ந.க.எண். 363/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.15% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்**: 17 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் :15**

கீழக்கரை நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்ட அறிக்கைகள் (Budget) கணினி மென்பொருளில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள வரவு, செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் **2021–2022** ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.165/2021/இ1)

அலுவலகக் குறிப்பு:

2022-2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் **2021–2022** ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.**: 18 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.